(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 349.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் பத்திரம்

### 2014 மார்ச்சு 19, புதன்கிழமை, பி.ப. 1.00 மணிக்கு

## வாய்மூல விடைக்கான வினாக்கள்

1946/ '11

1.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(5)

(அ) (i) இற்றைக்கு சுமார் ஓராண்டு காலம் தொடக்கம் கேகாலை மாவட்டத்தில் றம்புக்கனையில் அமைந்துள்ள வெள்ளைத் தும்புத் தொழிற்சாலை மூடப்பட்டுள்ளதன் காரணமாக பிரதேசத்திலுள்ள பெருந்தொகையான மக்களுக்கு தொழில்களின்றி பாரிய பொருளாதார நெருக்கடிகளுக்கு முகம்கொடுக்க நேரிட்டுள்ளதென்பதையும்;

(ii) மேற்படி வெள்ளைத் தும்புத் தொழிற்சாலைசார்ந்த நிலையத்தினால் வேலையில்லாத இளைஞர் யுவதிகளை சுயதொழிலில் ஈடுபடுத்தும் நோக்குடன் பயிற்சிப் பாடநெறியொன்று நடத்தப்பட்டு வந்ததென்பதையும்;

(iii) புத்தாக்கங்களுக்காக சனாதிபதி விருதினைக் கூட வென்றெடுத்துள்ள மேற்படி நிறுவனம் மூடப்பட்டிருப்பதானது தேசிய ரீதியில் பாரியதொரு தவறாகும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) (i) ஆமெனில், மீண்டும் இத் தொழிற்சாலை ஆரம்பிக்கப்படுமா என்பதையும்;

(ii) அதற்குத் தேவையான நிதி ஏற்பாடுகள் ஒதுக்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2713/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) 2012 மார்ச்சு மாதம் ஜெனிவாவிலுள்ள மனித உரிமைகள் சபைக்கு இலங்கைக்கு எதிராக தீர்மானமொன்றை கொண்டு வரமுன், அமெரிக்க இராஜாங்க வெளியுறவுச் செயலாளருடனான முதல் சந்திப்பு உத்தியோகபூர்வமாக எப்போது இடம்பெற்றது என்பதையும் ;

(ii) இச்சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்ட விடயங்களையும்;

(iii) மேற்கூறிய சந்திப்பின் பின்னர், மேற்கூறியவாறான தீர்மானமொன்றை அமெரிக்கா கொண்டுவரலாமென்று எதிர்பார்க்கப்பட்டதா என்பதையும்;

(iv) இலங்கையைப் பொறுத்தவரை புறக்கணிப்பு, அகந்தை, செயற்திறனின்மை என்பன மேற்கூறிய தீர்மானத்தில் இலங்கைத்தரப்பு தோல்வியடைய காரணமாய் அமைந்தனவா என்பதையும்;

அவர் கூறுவாரா?

(ஆ) (i) ஜெனிவாவில் நிறைவேற்றப்பட்ட பிரகடனத்துடன் தொடர்புடைய, இற்றைவரை மேற்கொள்ளப்பட்ட தகுந்த நடவடிக்கைகளையும்;

(ii) அரசாங்கம் தன்னுடைய நிலைப்பாட்டை மாற்றிக்கொண்டு, 2012 மே 18 ஆம் திகதி அமெரிக்க இராஜாங்க வெளியுறவுச் செயலாளர் திருமதி ஹிலரி கிளின்டனைச் சந்திக்க ஏன் இணக்கம் தெரிவித்தது என்பதையும்;

(iii) அங்கு கலந்துரையாடப்பட்ட விடயங்களையும் அச்சந்திப்பின் பிரதிபலனாக தற்போது மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3377/ '12

3.

கௌரவ பி. ஹரிசன்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) வடமத்திய மாகாணத்திலுள்ள கோட்டக் கல்விக் காரியாலயங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கோட்டக் கல்விக் காரியாலயங்களின் பெயர்கள் யாவையென்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டாகின்ற போது ஒவ்வொரு கோட்டக் கல்வி ஆளுகைப் பிரதேசத்திலும் மூடப்பட்டுள்ள பாடசாலைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் உள்ள பதில் கடமை புரியும் அதிபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி பதில்கடமை புரியும் அதிபர்கள் உள்ள பாடசாலைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) அனுராதபுரம் மற்றும் பொலன்னறுவை மாவட்டங்களில் ஒவ்வொரு கல்விக் கோட்டத்திலும் உள்ள அதிபர் தரம் உடைய அதிபர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி அதிபர் தரத்தைக் கொண்ட அதிபர்களில் பாடசாலைகள் வழங்கப்படாத அதிபர்களுக்கு பாடசாலைகளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) அதிபர் தர அதிபர் நியமனங்களைப் பெற்றுள்ள ஆசிரியர்கள் இருக்கின்ற பாடசாலைகளுக்கும் பதில் கடமையாற்றும் அதிபர்கள் நியமிக்கப் பட்டுள்ளார்களா என்பதையும்;

(iv) ஆமெனில், அவ்வாறான நியமனங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ள அனுராதபுரம் மற்றும் பொலனறுவை மாவட்டங்களிலுள்ள பாடசாலைகள், அவை உரித்தாகின்ற கல்விக் கோட்டங்களின் அடிப்படையில் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4095/ '13

4.

கௌரவ அனுர திஸாநாயக்க,— தொழில்நுட்ப, ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,—(2)

(அ) (i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பால்மா வகைகளில் உடலுக்கு பாதகமான ஆக்கக்கூறுகள் உள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், பால்மா வகைகளில் உள்ளடங்கியுள்ள உடலுக்கு பாதகமான ஆக்கக்கூறுகள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி ஆக்கக்கூறுகளை கொண்டுள்ள பால்மா வகைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) பால்மா வகைகளில் அடங்கியுள்ள பாதகமான ஆக்கக்கூறுகள் தொடர்பாக ஆராய்ச்சிகளை மேற்கொண்ட நிறுவனம் யாதென்பதையும்;

(ii) மேற்குறிப்பிட்ட விடயத்துக்கேற்புடைய ஆராய்ச்சி நடவடிக்கைகள் வெளிநாட்டு ஆய்வு கூடங்களுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி வெளிநாட்டு நிறுவனங்கள் மூலம் வழங்கப்பட்டுள்ள குறிப்பிட்ட ஆராய்ச்சி அறிக்கைகளில் உள்ளடங்கியுள்ள விடயங்கள் யாவையென்பதையும்;

(iv) பாதகமான ஆக்கக்கூறுகளை கொண்டுள்ள பால்மா வகைகள் மற்றும் குறித்த பால்மா வகைகளின் இறக்குமதியாளர்கள் தொடர்பாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4155/ '13

5.

கௌரவ ரஞ்ஜன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) 2013 யூன் மாதம் 15ஆம் திகதி டோஹா கட்டார் நாட்டுக்குச் செல்வதற்காக கட்டுநாயக்க பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திற்கு வருகை தந்த, இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவுசெய்யப்படாத நபர் ஒருவர் குறித்த பணியகத்தின் அலுவலர்களால் தடுத்து வைக்கப்பட்டிருந்த சந்தர்ப்பத்தில் அவ்விடத்திற்கு வந்த (டோஹா) கட்டாரின் இலங்கைத் தூதுவர் குறித்த நபரை உத்தியோகத்தர்களிடமிருந்து விடுவித்துக்கொண்டு பலவந்தமாக விமான நிலையத்தினுள் அழைத்துச் சென்றுள்ளார் என்பதையும்;

(ii) அச் சந்தர்ப்பத்தில் குறிப்பிட்ட தூதுவர் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் உத்தியோகத்தர்களை ஏசி அச்சுறுத்தியுள்ளார் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி சம்பவம் தொடர்பாக அமைச்சருக்கும் கட்டுநாயக்க விமான நிலையத்திலுள்ள வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தின் பிரதானிகளுக்கும் முறையிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தில் பதிவுசெய்யப்படாத இந்த நபரின் தொழில் வழங்குனராக கட்டார் நாட்டவர் ஒருவரின் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளபோது குறித்த நபரை வெளிநாட்டுக்கு அனுப்பி வைப்பதற்கு சம்பந்தப்பட்ட தூதுவரால் முடியுமா என்பதையும்;

(iii) எதிர்காலத்தில் இவ்வாறான சம்பவங்களை தடுப்பதற்கு மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4218/ '13

6.

கௌரவ அஜித் பி. பெரேரா,— நல்லாட்சி மற்றும் உட்கட்டமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையினுள் அரச சேவையில் நல்லாட்சியை நிலைநாட்டுவதற்காக மேற்படி அமைச்சு பொறுப்பேற்கப்பட்ட திகதி தொடக்கம் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) அரச சேவையில் நல்லாட்சியை உறுதிப்படுத்துவதற்காக எதிர்காலத்தில் மேற்கொள்ள எதிர்ப்பார்க்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4277/ '13

7.

கௌரவ துனேஷ் கன்கந்த,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேற்பதற்கு,— (1)

(அ) (i) பொருளாதார அபிவிருத்தி அமைச்சினால் மக்கள் சபை (ஜனசபா) பணிப்பாளர் நாயகம் ஒருவர் நியமிக்கப்பட்டுள்ளாரா;

(ii) ஆமெனில், இவரது பெயர் மற்றும் கல்வித் தகைமைகள் யாவை;

(iii) மேற்படி நியமனம் மேற்கொள்ளப்பட்டுள்ள திகதி, அப் பதவிக்கான மாதாந்த சம்பளம், கொடுப்பனவுகள் மற்றும் ஏனைய சிறப்புரிமைகள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது நாட்டினுள் இயங்கிவருகின்ற மக்கள் சபைகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(ii) மக்கள் சபையின் உள்ளமைப்பு எவ்வாறு அமைந்துள்ளது;

(iii) மேற்படி மக்கள் சபைகள் இயங்கிவருகின்ற கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4310/ '13

8.

கௌரவ வசந்த அலுவிஹாரே,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புனித தலங்களின் அபிவிருத்திக்காக பொது மக்களின் காணிகள் மற்றும் சொத்துக்களை சுவீகரிக்கின்றபோது ஏற்புடையதாக்கிக் கொள்ளப்படுகின்ற சட்ட ஏற்பாடுகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் சுவீகரிக்கப்படும் காணிகள் சார்பில் காணியை இழக்கும் மக்களுக்கு வழங்கப்படும் நிவாரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1982ஆம் ஆண்டு தொடக்கம் இற்றைவரை தம்புளை புனித நகர அபிவிருத்திக்காக சுவீகரிக்கப்பட்ட காணிகள் சார்பில் காணி உரிமையாளர்களுக்கு இற்றைவரை மாற்றுக் காணிகள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என்பதையும்;

(ii) மேற்படி புனித நகரிலிருந்து வெளியேற்றப்பட்ட பூர்வீக குடியிருப்பாளர்கள் 17 பேருக்கு காணிகளை பெற்றுக்கொடுக்க அதிமேதகு ஜனாதிபதியினால் மேற்கொள்ளப்பட்ட விதப்புரை கூட இற்றைவரை அமுலாக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(இ) (i) தம்புளை புனித நகர அபிவிருத்திக்காக சுவீகரிப்பதற்கு உத்தேசமாயுள்ள காணிகளின் பரப்பளவு எவ்வளவென்பதையும்;

(ii) மேலே கூறப்பட்ட புனித தலங்களின் அபிவிருத்தி காரணமாக காணிகளை இழக்கின்ற மக்களுக்கு வழங்கப்படுகின்ற மாற்றுக் காணிகளின் விபரங்கள் யாவை என்பதையும்;

(iii) தம்புளை புனித நகர அபிவிருத்தியின் காரணமாக காணிகளை இழக்கின்ற மக்களுக்கு மாற்றுக் காணிகளை அல்லது பொருத்தமான நட்டஈட்டுத் தொகையை பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாராயின், அதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4312/ '13

9.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) அரசாங்க வடிசாலைக் கூட்டுத்தாபனம் தனியார்மயப்படுத்தப்பட்ட ஆண்டு யாது என்பதையும்;

(ii) தனியார்மயப்படுத்திய சந்தர்ப்பத்தில் அரசாங்க வடிசாலைக் கூட்டுத்தாபனத்தில் சேவையாற்றிய ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) அரசாங்க வடிசாலைக் கூட்டுத்தாபனம் ஆரம்பிக்கப்பட்டபோது, அப்போதைய கௌரவ நிதி அமைச்சர் கலாநிதி என்.எம். பெரேரா அரசாங்க வடிசாலைக் கூட்டுத்தாபன ஊழியர்கள் சார்பில் பொதுத் திறைசேரியில் வைப்புச் செய்த பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) அரசாங்க வடிசாலைக் கூட்டுத்தாபனம் தனியார்மயப்படுத்தப்பட்ட பின்னர் புதிய நிறுவனத்தில் சேவையாற்ற விரும்பாத ஊழியர்களில் பதவி விலகிய, சேவையிலிருந்து அகற்றப்பட்ட மற்றும் பதவி விட்டு நீங்கிய ஊழியர்களுக்கு ஏதேனும் நட்டஈட்டுத் தொகையை பொதுத் திறைசேரியில் வைப்பிலிடப்பட்ட பணத் தொகையிலிருந்து பெற்றுக் கொடுக்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(v) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு ஊழியருக்கும் செலுத்தப்பட்ட நட்டஈட்டுத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4328/ '13

10.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் ஒட்டுமொத்த அரசாங்க சேவையினுள் பெண்கள் பிரதிநிதித்துவம் அதிகமாக காணப்படும் சேவைகள் யாவை என்பதையும்;

(ii) தற்போது அரசாங்க சேவையிலுள்ள பல்கலைக்கழக கல்வி மற்றும் அதற்குக் கூடிய கல்வித் தகைமைகளைப் பெற்றுள்ள பெண்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) அரசாங்க சேவையில் க.பொ.த (சா.த) மற்றும் அதற்குக் குறைந்த கல்வி மட்டங்களிலுள்ள பெண்கள் பிரதிநிதித்துவம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) தற்போது இலங்கை நிருவாக சேவை, இலங்கை பொறியியல் சேவை, இலங்கை திட்டமிடல் சேவை மற்றும் இலங்கை மருத்துவ சேவை ஆகிய உயர்தொழில்களில் பெண்கள் பிரதிநிதித்துவம் வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3152/ '12

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒலுவில் துறைமுத்தின் மொத்த நிர்மாணச்செலவவு எவ்வளவென்பதையும்;

(ii) இலங்கை துறைமுக அதிகாரசபையானது தொடர்ச்சியாக பணத்தை இழந்துவரும் நிலையில் இது போட்டித்தன்மையாக இருக்க முடியுமா என்பதையும்

அவர் கூறுவாரா?

(ஆ) 2007 ஆம் ஆண்டில் இருந்து இற்றைவரைக்கும் ஆண்டு அடிப்படையில் இலங்கை துறைமுக அதிகாரசபையின் முதலீட்டு மற்றும் பொது ஒதுக்குகளின் நகர்வுகளை அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3211/ '12

12.

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும், பௌத்தசாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ரங்கிரி தம்புலு ரஜமகாவிகாரை சங்கசபையானது அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சங்கசபை என்பதையும்;

(ii) மேற்படி சங்கசபையில் பிக்குமார்களைப் போன்றே பிக்குணிமார்களும் அங்கத்துவம் வகிக்கின்றனரென்பதையும்; மற்றும்

(iii) மேற்படி சங்கசபைக்குரிய உயர் தீட்சை (*உபசம்பதாவ*) பெற்ற 800 பிக்குமார்களும் 2200 பிக்குணிமார்களும் உள்ளனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) ரங்கிரி தம்புலு ரஜமகாவிகாரை சங்கசபையில் அங்கத்துவம் வகிக்கும் பிக்குணிமார்களின் விகாரைகளை பதிவுசெய்வதற்காக நடவடிக்கை எடுப்பாரா;

(ii) ஆமெனில், அத்திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3382/ '12

13.

கௌரவ பி. ஹரிசன்,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் இன்று வரை நிர்மாணிக்கப்பட்டுள்ள காட்டு யானைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான மின்சார வேலிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி மின்சார வேலிகளின் மொத்த நீளம் எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி வேலிகளின் பராமரிப்புக்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்;

(iv) ஒரு கிலோ மீட்டர் மின்சார வேலியின் நிர்மாணிப்புக்கும் பராமரிப்புக்குமாக ஏற்படுகின்ற மொத்த செலவு தனித்தனியாக எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) கடந்த 05 வருடத்தினுள்,

(i) நிர்மாணிக்கப்பட்டுள்ள காட்டு யானைகளிலிருந்து பாதுகாப்புப் பெறுவதற்கான மின்சார வேலிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு மின்சார வேலியின் நீளம் வெவ்வேறாக எவ்வளவென்பதையும்;

(iii) யானை- மனித மோதலின் காரணமாக இழக்கப்பட்டுள்ள மனித உயிர்கள், சொத்துக்கள் மற்றும் காட்டு யானைகளின் எண்ணிக்கை வருட ரீதியில் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி சேதங்களுக்காக அரசாங்கம் செலுத்தியுள்ள நட்டஈட்டுத் தொகை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்டவாறு பாதுகாப்பு வேலைத்திட்டமொன்று நடைமுறையில் உள்ளபோதிலும், காட்டு யானைகளின் உயிர்கள், மனித உயிர்கள் மற்றும் சொத்துக்கள் என்பவற்றுக்கு சேதம் ஏற்படுதல் அதிகரித்துள்ளதென்பதையும்;

(ii) எனவே, மேற்படி முறைகளைவிட மாற்று முறைகளைக் கடைப்பிடித்தல் பொருத்தமாகுமென்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஈ) ஆமெனில், மேற்படி இ (ii) இற்கு ஏற்புடையதான மாற்று முறையை அவர் இச்சபைக்கு வெளிப்படுத்துவாரா?

(உ) இன்றேல், ஏன்?

3153/ '12

14\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கும் ஐக்கிய அமெரிக்காவுக்கும் இடையில் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைக்கு இட்டுச் சென்ற வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டக உடன்படிக்கை ஏன் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லப்படவில்லை என்பதையும்;

(ii) 2004 மே மாதம் 01 ஆம் திகதி முதல் இற்றைவரை வர்த்தக மற்றும் முதலீட்டு சட்டக உடன்படிக்கை தொடர்பாக நடைபெற்றுள்ள கூட்டங்களின் எண்ணிக்கையையும்;

(iii) தற்போதுள்ளவாறு இலங்கையில் இருந்து ஐக்கிய அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்படுகின்ற பொருட்களையும்;;

(iv) ஐக்கிய அமெரிக்காவில் இருந்து இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படுகின்ற பண்டங்களையும்; மற்றும்

(v) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் இலங்கை மற்றும் ஐக்கிய அமெரிக்காவுக்கு இடையிலான வர்த்தக நிலுவையை வெவ்வேறாகவும்

அவர் கூறுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

15.

கௌரவ புத்திக பதிரண,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 ஆம் ஆண்டு முதல் இற்றை வரை இலங்கைக்கு கிடைக்கப்பெற்றுள்ள வெளிநாட்டு முதலீடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி முதலீடுகளுக்காக பயன்படுத்தப்பட்டுள்ள மொத்த நிதி தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நிதி பயன்படுத்தப்பட்டுள்ள கைத்தொழில்கள் அல்லது சேவைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வெளிநாட்டு முதலீட்டாளர்களை ஊக்குவிப்பதற்காக வழங்கப்பட்டுள்ள சலுகைகள் யாவையென்பதையும்;

(ii) 2010, 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளில் இவர்களது கைத்தொழில்சாலைகளை அல்லது சேவை நிலையங்களை தாபிப்பதற்கு அரசாங்கம் காணி வழங்கியுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி காணிகள் எந்த அடிப்படையில் வழங்கப்பட்டது என்பதையும்;

(iv) அவ்வாறு வழங்கப்பட்டுள்ள காணிகள் அமைந்துள்ள மாவட்டம், காணிகளின் பரப்பளவு மற்றும் காணியின் பெயர், முகவரி ஆகியவை தனித்தனியாக யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# பொது அலுவல்கள் ஆரம்பத்தின் போது

## பிரேரணை முன்னறிவித்தல்

1.

கௌரவ (டாக்டர்) ரோஹண புஷ்பகுமார,— சட்டமூலம் கொண்டுவர அனுமதி,— பின்வரும் சட்டமூலம் கொண்டுவர அனுமதி வழங்கப்படுமாக :-

"கஷி புண்டா ஸ்ரீ லங்கா மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டமூலம்"

---

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

* 1.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— 2014.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவரது எரிபொருள் கொடுப்பனவானது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 155அ (7) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

தேசிய பொலிஸ் ஆணைக்குழுவின் தலைவருக்காக ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனத்திற்காக மாதாந்தம் பெற்றோல் அல்லது டீசல் 225 லீற்றருக்குச் சமமான சந்தை நிலவும் விலைகளுக்கு நேரொத்த கொடுப்பனவொன்றைச் செலுத்த வேண்டுமெனவும், இவ் ஆணைக்குழுவின் தலைவருக்குச் செலுத்தப்பட வேண்டிய எரிபொருள் கொடுப்பனவு தொடர்பில் ஏற்கனவே பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவு களுக்குப் பதிலாக இப் பிரேரணை மூலம் தீர்மானிக்கப்படும் எரிபொருள் கொடுப்பனவுகள் பதிலீடு செய்யப்படல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 2.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— 2014.01.01 ஆம் திகதியிலிருந்து நடைமுறைக்கு வருமாறு, அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தலைவரது எரிபொருள் கொடுப்பனவானது, இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 54(8) ஆம் உறுப்புரையின் பிரகாரம் பின்வருமாறானதாக அமைதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

அரசாங்க சேவை ஆணைக்குழுவின் தலைவருக்காக ஒதுக்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனத்திற்காக மாதாந்தம் பெற்றோல் அல்லது டீசல் 225 லீற்றருக்குச் சமமான சந்தை நிலவும் விலைகளுக்கு நேரொத்த கொடுப்பனவொன்றைச் செலுத்த வேண்டுமெனவும், இவ் ஆணைக்குழுவின் தலைவருக்குச் செலுத்தப்பட வேண்டிய எரிபொருள் கொடுப்பனவு தொடர்பில் ஏற்கனவே பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைகளினால் தீர்மானிக்கப்பட்ட எரிபொருள் கொடுப்பனவுகளுக்குப் பதிலாக இப் பிரேரணை மூலம் தீர்மானிக்கப்படும் எரிபொருள் கொடுப்பனவுகள் பதிலீடு செய்யப்படல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் மேலும் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 3.

மருத்துவம் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 4.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.1),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 சனவரி 30 ஆம் திகதிய 1847/35 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 5.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.2),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 சனவரி 30 ஆம் திகதிய 1847/36 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 6.

முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சர்,— செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் கீழ் கட்டளை (இல.3),— திருத்தப்பட்டவாறான 2008 ஆம் ஆண்டின் 14 ஆம் இலக்க, செயல்நுணுக்க அபிவிருத்திக் கருத்திட்டங்கள் சட்டத்தின் 3 ஆம் பிரிவின் (4) ஆம் உட்பிரிவின் கீழ் முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2014 சனவரி 30 ஆம் திகதிய 1847/37 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.02.18 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 7.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 8.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 9.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 10.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 11.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 12.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஓகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது.)

* 13.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

14.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

15.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

16.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

17.

சமஸ்த லங்கா சாசனாரக்சக மண்டலய (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

18.

பௌத்த விகாரைகளை மறுசீரமைத்தல் மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

19.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

20.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தம்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.